பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2058 | தை 17 | சனிக்கிழமை | 31.01.2026 | அதிர்வு 184


## தமிழரசின் மூத்த தலைவர் மாவைக்குச் சிலை திறப்பு



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதி 02

# வடக்கு மக்களின் அடிப்படைத் தேவை பூர்த்தி செய்யப்படும்

## அபிவிருத்தியும் தொடரும் என்று அநுர அரசு உறுதி

“வடக்கு மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும். அதேவேளை, அபிவிருத்திப் பணிகளும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும்.” - என்று அநுர அரசு உறுதியளித்துள்ளது. 06



# நன்கு கட்டமைக்கப்பட்ட இன அழிப்பே கிவுல் ஓயா

## தமிழர் மரபுரிமைப் பேரவை கண்டனம்



சர்ச்சைக்குரிய கிவுல் ஓயா திட்டமானது, தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற நன்கு கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் தொடர்ச்சியாகவே காணப்படுகின்றது என்று தமிழர் மரபுரிமைப் பேரவையின் இணைத் தலைவர் லியோ ஆம்ஸ்ரோங் அடிகளார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

“மகாவலி அதிகார சபையால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைக்கு அமைய, கிவுல் ஓயா நீர்த்தேக்கமானது வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரவில் உள்ள தமிழர்களின் பூர்வீக கிராமங்களுக்கு அண்மையாக அமைக்கப்படவுள்ள மிகப்பெரிய நீர்த்தேக்கமாகும்.

மகாவலி அதிகார சபை 06




அண்மைக் காலத்தில் தமிழர் தரப்பினாலும் சர்ச்சைக்குரிய விடயமாகப் பேசப்படுகின்ற அரசமைப்புக் கவுன்ஸிலின் முக்கிய கூட்டம் நேற்று முற்பகல் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

கவுன்ஸிலின் இந்த வருடத்திற்கான இரண்டாவது கூட்டம் இதுவாயினும், கவுன்ஸிலுக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மூன்று சிவில் சமூகப் பிரதிநிதிகள் பங்குபற்றிய முதலாவது கூட்டமும் இதுவாகும்.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களாகிய பேராசிரியர் வசந்த செனிவரட்ன, ஒஸ்ரின் பெர்னாண்டோ, ரஞ்சித் ஆரியரத்ன ஆகியோர் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றினர். சிங்கப்பூரில் இருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இணையம் வழியாகப் பங்குபற்றினார். அவரின் பிரதிநிதி அஜித் பெரேரா மற்றும் சிறிதரன் ஆகியோர் நேரடியாகக் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் புதிய கணக்காய்வாளர் நாயகம் நியமனம் தொடர்பான முடிவு 06

# பௌத்த சாசனத்தை அவமதிக்கின்ற அநுர அரசை விரட்டியடிக்க வேண்டும்

## இப்படி சரத் வீரசேகர வலியுறுத்து



"இலங்கையின் பௌத்த சாசனம் மீது விமர்சனக்கணை தொடுக்கும் அநுர அரசை விரட்டியடிக்க வேண்டும். இதற்குரிய நடவடிக்கையை நாம் முன்னெடுக்க வேண்டும்."

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"எனது நாட்டில் சாசனம் மற்றும் வளங்களைப்பாதுகாக்க வேண்டுமெனில் ஒற்றையாட்சியைப் பாதுகாக்க வேண்டும்.

ஒற்றையாட்சி பாதுகாக்கப்படும் என்ற உத்தரவாதத்தை வழங்கி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ஒரேயொரு ஜனாதிபதி வேட்பாளர் என்றால் அது நாமல் ராஜபக்ஷதான்.

தமக்குரிய வாக்கு குறையும் எனதெரிந்தும் அவர் அந்த அறிவிப்பை விடுத்தார்.

அப்படியான ஒருவர் ஜனாதிபதியானால்தான் இந்த நாட்டையும், பௌத்த சாசனத்தையும் பாதுகாக்க முடியும். அத்துடன் பௌத்த பிக்குகளுக்குரிய கௌரவமும் மீளக் கிடைக்கப்பெறும்." – என்றார்.

# 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்களை பாவிக்க தடை

12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு சமூக ஊடகங்களின் பாவனையை தடை செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பாக சிறுவர் உள நல விசேட வைத்தியர்கள் ஊடாக அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தடையை அமுல்படுத்த முன்னர் பல தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

12 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் துஷ்பிரயோகத்திலிருந்து சிறுவர்களை பாதுகாக்கவும் சமூக ஊடகத் தடைகள் விதிக்கப்பட வேண்டும் என்ற உலகளாவிய போக்கு தற்போது உருவாகியுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

சிறுவர்களுக்கு எதிரான சைபர் குற்றங்களைத்தடுப்பதற்காக சட்டமொன்றை கொண்டுவரவுள்ளதாகவும் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் குறிப்பிட்டார்.



இதற்காக ஏற்கனவே அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது.

இதனிடையே, சிறுவர்களுக்கு சமூக ஊடகத் தடைகள் தொடர்பில் அமைச்சு மட்டத்தில் கலந்துரையாடல்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக டிஜிட்டல் பொருளாதார விவகார பிரதியமைச்சர் எரங்க வீரரத்ன கூறினார்.

## தமிழரசின் மூத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ராஜாவின் நினைவுச்சிலை மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

மாவை சேனாதிராஜாவின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டே இந்தச் சிலை திறந்து வைக்கப்படவுள்ளது.

இதைத் தொடர்ந்து, யாழ்.நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கத்தில் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் பிரதம அறங்காவலர் சா.செ.இளங்கோவன் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நினைவுப் பேருரைகளைத் தொடர்ந்து மாவை சோ.சேனாதிராஜாவின் முதலாமாண்டு நினைவுமலர், பேராசிரியர் பாஞ். இராமலிங்கம் எழுதிய "ஈழ அண்ணல் சோ.மாவை சேனாதிராஜா" ஆகிய இரு நூல்களும் வெளியிடப்படவுள்ளன.





# கால்நடைகளை இழந்த பண்ணையாளர்களுக்கு திருமலையில் 55 கோடி ரூபா இழப்பீடு வழங்கல்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தில் டித்வா புயல் மற்றும் மழை வெள்ளத்தால் பேரழிவிற்கு உள்ளான கால்நடைகளுக்கான அனர்த்த நிவாரணக் கொடுப்பனவாக ரூபா 550 மில்லியன்,கால்நடைகளை இழந்த பண்ணையாளர்களுக்கு நேற்று வெள்ளிக்கிழமை திருகோணமலையில் வைத்து வழங்கப்பட்டது.

நாடு முழுவதும் அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தினால் கால்நடைகள் அழிவடைந்தன. இதனால் கால்நடைகளை இழந்த பண்ணையாளர்களுக்கு அரச நிவாரணக் கொடுப்பனவு தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. இதன்படி நாட்டில் அதிக இழப்பீட்டுத் தொகையான ரூபா 550 மில்லியன் திருகோணமலை மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

நேற்று திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நிவாரணக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வின் போது பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ரா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன ஆகியோர் பாதிக்கப்பட்ட கால்நடைப் பண்ணையாளர்களுக்குரிய இழப்பீட்டு கொடுப்பனவிற்கான காசோலைகளை வழங்கி வைத்தனர்.






# திருமலையில் முளைத்த சுவரொட்டிகள்!







(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதிவண.நோயல் இம்மானுவேல் ஆண்டகைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றைய தினம் நகரின் சில இடங்கஎில் கையமுத்தில் அமைந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

அத்துடன் தமிழ் சமூக செயற்பாட்டாளர் ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

இது தொடர்பாக அந்த சமூக செயற்பாட்டாளரால் திருகோணமலை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டினை அடுத்து மேற்படி பதாகைகள் பொலிஸாரினால் அகற்றப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# சாவகச்சேரி நகரசபைப் பகுதியில் 'லஞ்ச் சீற்' பாவிப்பதற்குத் தடை!

## நாளை முதல் நடைமுறைக்கு வருகின்றது

(த.சுபேசன்)

வருங்கால சந்ததியை புற்றுநோயில் இருந்து மீட்டெடுக்கும் முகமாகவும், அதேநேரம் வடக்கு மாகாண ஆளுந ருடைய சுற்றறிக்கையின் பிரகாரமும் எதிர்வரும் முதலாம் திகதி – அதாவது நாளை ஞாயிற்றுக்கிழமை – தொடக்கம் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட உணவகங்கள் மற்றும் திருமண மண்ட பங்களில் "லஞ்ச் சீற்" பாவனை முற்றாகத் தடை செய்யப்படுவதாகவும், அதனை மீறும் பட்சத்தில் தண்டம் அறவிடப்படும் எனவும் நகரசபைத் தவிசாளர் வ.ஸ்ரீ பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில் அவர் கூறியவை வருமாறு:-

இந்த ஏற்பாடு 2026ஆம் ஆண்டு



ஜனவரு மாதத்தில் இருந்து நடை முறைப்படுத்தப்பட வேண்டிய விடயம். ஆனால் நாம் மக்கள் விழிப்புணர்வு அடைவதற்காக ஒருமாதகாலம் அவகாசம் வழங்கி அதனை நடைமுறைப்படுத்து கிறோம்.

உணவகங்கள் மற்றும் திருமண மண்டபங்கள் லஞ்ச் சீற் பாவனைக்குப் பதிலாக வாழையிலை, தேக்கம் இலை, காட்போட் பெட்டிகளில் உணவுகளை பரிமாற முடியும். அத்துடன் உணவுத் தட்டுக்களை உரிய வெப்பநிலையில் சுடுநீரில் கழுவியும் உணவிகளைப் பரி மாறலாம்.

உடல் ஆரோக்கியத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக காணப்படும் லஞ்ச் சீற் பாவனையை தடை செய்ய வேண்டியது அவசியம். இதன் பாவனை புற்றுநோயை ஏற்படுத்தக்கூடியது.

எனவே சாவகச்சேரி நகரசபையின் நடவடிக்கைக்கு உணவகங்கள் மற்றும் திருமண மண்டபங்கள் ஒத்துழைப்பு வழங்கி எதிர்கால சந்ததியினரை நோய் நொடியில் இருந்து காப்பாற்ற முயற்சிக்க வேண்டும். – என மேலும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

---

# பிராஜா சக்தி திட்டம் தமிழ் தேசிய அரசியலை வேரிலேயே அழித்து விடக் கூடிய ஆபத்தானது

## அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம் கூறுகின்றார்

(பூ.லின்ரன்)

தேசிய மக்கள் சக்தி என்கின்ற ஜே.வி.பியால் கொண்டுவரப்பட்ட பிராஜா சக்தி எனும் திட்டம் தமிழ்த் தேசிய அரசியலை வேரிலேயே அழிக்க கூடிய ஆபத்தானது என அரசியல் ஆய்வாள ரும், சட்டதரணியும், சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குனருமான சி. அ.யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்றுத்தனது அலுவலகத்தில் நடாத்திய ஊடக சந்திப்பிலேயே இவ் வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் கூறி யவை வருமாறு:-

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியாளர் கள் அடிமட்ட மக்கள் மத்தியில் பணி யாற்றுவதற்காக பிரஜா சக்தி என்கின்ற அமைப்பை உருவாக்கியுள்ளனர். அந்த அமைப்பின் ஊடாக வறுமை ஒழிப்புத் திட்டத்தை தாம் மேற்கொள் கின்றார்கள் எனக் கூறி வருகிறார்கள்.

தங்களினுடைய உள்ளூராட்சி அதிகாரங்கள் இல்லாத இடங்களில், இருக்கும் நிர்வாகங்களைப் பலவீனப் படுத்துவதற்காக அந்த அதிகாரத்திற்கு சமாந்தரமாக உருவாக்கப்பட்ட அமைப் புத்தான் இந்த பிராஜா சக்தி அமைப்பு.

இது தமிழ் பகுதிகளில் உள்ளூராட்சி மன்றங்களைப் பலவீனப்படுத்துவதற் காக உருவாக்கப்பட்ட ஒன்று என்றுதான் கூறவேண்டும்.

கிராமங்களில் அவர்கள் (ஜே.வி.பிய ணினர்) பிராஜா சக்தித் தலைவர்களைத் தெரிவு செய் கின்றார்கள்.

தேசிய மக்கள் சக்தி தங்களோடு நம்பிக்கையாக நிற்பவர்களைத்தான் தெரிவு செய்கின்றார்களே தவிர, மக்கள் தெரிவு செய்த தலைவராக அந்த தலை



வர் இருக்கவில்லை.

இங்கு ஜனாதிபதி வருகின்ற போது கிளைகள் எல்லாவற்றிற்கும் மக்களை அழைத்து வருமாறு கட்டளையி டப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருக் கிறது.

கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகாத்தர்கள், பிராஜா சக்தி கட்டமைப்புக்களுக்கும் ஆள்களை அழைத்துவரக் கட்டளை இடப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களினுடைய பணிகளை வடக்கு கிழக்கு தமிழர் பகுதிகளில் மேற் கொள்வதற்கே இந்த அமைப்பு செயற்படுகிறது என்று சொல்லிவிடலாம். அடிமட்ட மக்கள் மத்தியில் பணியாற்றிய அனுபவம் தேசிய மக்கள் சக்தியுடைய தலைமை கட்சியான ஜே.வி.பியிடம் இருப்பதனால் அது அவர்களுக்கு இந்த இடத்தில் அதிகம் துணை புரியும்.

தமிழ் தேசிய சக்திகள் இதன்னுடைய அபாயத்தை சரியாக விளங்கிகொள்ள வேண்டும். தமிழ் தேசிய சக்திகளை பொறுத்தவரை அவர்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பு அரசியலை செய்து கொண்டி ருக்கிறார்களே தவிர, தேச நிர்மாண அரசியலில் கவனம் செலுத்தவில்லை. எமது மக்களில் உதவிகளையும் தேவை களையும் எதிர்பார்ப்பவர்கள் இருக் கிறார்கள். அகவே அந்த நலன்களை பேணவேண்டிய பொறுப்பு தமிழ் தேசிய சக்திகளுக்கு இருக்கின்றது. தமிழ் தேசிய சக்திகள் அதில் கவனம் செலுத்த மையால் தேசிய மக்கள் சக்தி அர சாங்கம் அந்த வெற்றிடத்தை நிரப் புகின்ற ஒரு நிலைமையை நாங்கள் பார்க்கின்றோம். அகவே இது ஓர் அபாயமான விடயம். ஏனெனில் அடிமட்டத்தில் தமிழ் தேசிய அரசியலை பலவீனப்படுத்துகின்றது. உண்மையில் கிராமங்களில் அடிமட்டமாக இருக்கின்ற அந்த மக்களைப் பலவீனப்படுத்துகின்ற ஓர் அரசியலை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுக்க முனை கிறது.

இது தமிழ் தேசிய அரசியலை வேரிலேயே அழுக செய்கின்ற ஒரு நிலமை.

இந்த விடயம் தொடர்பில் வலுவான கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கின்றது என்றே நான் நினைக் கின்றேன்.

எதிர்ப்பு அரசியலில் மட்டும் கவனம் செலுத்தாமல் தேச நிர்மாண அரசியலி லும் கவனம் செலுத்துகின்றபோது இந்த விடயங்களை வெற்றிகொள்ளக் கூடிய நிலைமை உருவாகும். இது தொடர்பான பொறுப்பு தமிழ் அரசியல் கட்சிகளுக்கு மட்டும் அல்ல. தமிழ் தேசிய சக்திகள் அனைவருக்கும் இருக்கின்றது என நான் நினைக்கின் றேன். – என்றார்.



# அடிப்படை வசதிகள் ஏதுமற்று இயங்கும் தண்ணீரூற்று தமிழ்க் கலவன் பாடசாலை

## நிலைமைகளை நேரில் சென்று ஆராய்ந்தார் ரவிகரன் எம்.பி.

**(பா.சதீசன்)**

அடிப்படை வசதிகளற்ற நிலையில் மிகவும் மோசமான குறைபாடுகளுடன் இயங்கிவரும் முல்லைத்தீவு – தண்ணீரூற்று இலங்கைத் திருச்சபை தமிழ் கலவன் பாடசாலைக்கு நேற்று நேரடியாகச் சென்ற வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாடசாலையில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளார்.

பாடசாலையின் நலன்விரும்பிகளின் முறைப்பாட்டிற்கு அமைவாக அந்தப் பாடசாலைக்கு களவிஜயம் மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், பாடசாலையின் சுற்றுப்புறச்சூழலையும், வகுப்பறைக்கட்டடங்களையும் பார்வையிட்டார்.பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள், நலன்விரும்பிகளுடன் கலந்துரையாடி குறைபாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

தரம் 01 தொடக்கம் தரம்05 வரையான வகுப்புக்களைக் கொண்ட இந்தப் பாடசாலையில் 79 மாணவர்கள் கவ்வி கற்று வருகின்றார்கள். இருப்பினும் பாடசாலையின் சுற்றுப்புறச்சூழலும், வகுப்பறைக் கட்டடங்களும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுக் காணப்படுகின்றன எனொ பாடசாலையின் நலன் விரும்பிக்கள் மற்றும் பெற்றோரால் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இப்பாடசாலையில் மிகவும் பழமையான வகுப்பறைக்கட்டடங்கள் வெடிப்புக்களுடனும், கரைகள் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுவதால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளும் பாதிக்கப்படுகின்றன என இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரியப் படுத்தப்பட்டது.

அத்தோடு பாடசாலையின் சுற்றுப்பறச் சூழல் நீர்தேங்கிய நிலையில் சேறும் சகதியுமாகக் காணப்படுவதால் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் வகுப்பறைக்குச் செல்வதற்கு பலத்த இடர்பாடுகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

வகுப்பறைகளுக்குச் செல்வதற்கு பிரத்தியேகமாக சீமெந்தினால் அமைக்கப்பட்டுள்ள சிறிய அளவிலான வழித்தடத்தினையே மாணவர்களும் ஆசிரியர்களும் பயன்படுத்துகின்றனர். எனவே இத்தகைய சிறிய அளவிலான வழித்தடத்தினைப் படுன்படுத்துவதால் மாணவர்கள் வழித்தடத்திலிருந்து விலகி சேற்றுப் பகுதிக்குள் தவறி வீழ்கின்ற அபாயநிலை காணப்படுவதாக பெற்றோர் அச்சம் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை மாணவர்கள் பயன்படுத்துகின்ற கழிப்பறைளைச் சூழ சேறும் சகதியுமாகக் காணப்படுவதாலும், கழிப்பறைகளுக்கு செல்வதற்கு பாதுகாப்பான வழித்தட வசதிகள் எவையுமின்மையாலும் ஆசிரியர்களுக்கென அமைக்கப்பட்ட கழிப்பறைகளையே மாணவர்கள் தற்போது பயன்படுத்திவருகின்ற நிலை காணப்படுவதாகவும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

மேலும் பாடசாலை விளையாட்டுமைதானம் உட்பட சுற்றுப்புறச் சூழலெங்கும் சேறும் சகதியுமாக காணப்படுவதால்

தொடர்ச்சி▼



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அது அடுத்த கூட்டத்துக்கு ஒத்திவைக்கப்பட்டதாக நேற்று மாலை செய்திகள் வெளியிடப்பட்டன. அதற்கு அப்பால் கூட்டத்தில் இது தொடர்பாக நடைபெற்ற விடயங்கள் செய்தியாக வெளியாகவில்லை.

எனினும், உள்வீட்டில் அறிந்து கொள்ளப்பட்ட விடயங்களின்படி, இந்த அரசமைப்புக் கவுன்ஸிலில் இருந்து சிறிதரனை வெளியேறும்படி அவரது கட்சியின் அரசியல் குழு கொடுத்த 'குழுசை' நேற்றைய அரசமைப்புக் கவுன்ஸில் கூட்டத்தில் நல்ல முறையில் வேலை செய்திருப்பதாகத் தகவல் கிட்டியது.

புதிய கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு தற்போது கணக்காய்வுத் திணைக்களத்தில் சிரேஷ்ட பிரதி கணக்காய்வாளர் நாயகமாக இருக்கும் எல்.எஸ்.பி.ஜெயரட்ன என்ற பெண்மணியின் பெயரை ஜனாதிபதி பரிந்துரைத்திருந்தார் என அறிய வந்தது. ஏற்கனவே இவரை பதில் கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு ஜனாதிபதி பரிந்துரைத்திருந்த நிலையில், அதனை அரசமைப்பு கவுன்ஸில் நிராகரித்திருந்தது. அந்த நிலையில் அவரது பெயரையே மீண்டும் நிரந்தர கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு ஜனாதிபதி இப்போது பரிந்துரைத்திருந்தார் என அரசமைப்பு கவுன்ஸில் வட்டாரங்களில் இருந்து தெரிய வந்தது.

ஆனால் இந்தப் பெண் அலுவலருக்கு எதிராக தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் உள்ளக விசாரணை ஒன்று நடைபெற்று வருவதான தகவலை, ஜனாதிபதியின் அந்தப் பரிந்துரைக்கு எதிரான விவகாரமாக சிறிதரனே நேற்றைய கூட்டத்தில் வெளிப்படுத்தினார் என்று கவுன்ஸில் தகவல்கள் தெரிவித்தன.

அது என்ன விசாரணை, அதன் நிலைமை என்ன, ஆழமான சிக்கல்கள் கொண்ட விடயங்கள் அந்த விசாரணையில் உள்ளனவா என்பவை பற்றி அறிந்த பின்னர் அடுத்த கூட்டத்தில் இவ்விடயம் குறித்து முடிவெடுக்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டதாக உள் வீட்டு தகவல் ஒன்று தெரிவித்தது.

அரசமைப்பு கவுன்ஸிலில் ஆளுந்தரப்பு சொல்லுகின்ற – எதிர்பார்க்கின்ற – விடயங்கள் எல்லாவற்றுக்கும் பிரதான எதிர்க்கட்சி தவிர்ந்த ஏனைய எதிர்க்கட்சிகளின் பிரதிநிதியான சிறிதரன் தலையாட்டுகின்றார் என்ற குற்றச்சாட்டு வலிமையாக முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், இல்லை என்று மறுப்பதற்கான காத்திரமான நடவடிக்கைகளை சிறிதரன் வெளிப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார்.

நேற்றுக் கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு ஜனாதிபதியினால் பரிந்துரைக்கப்பட்ட பெண் அலுவலர் உள்ளக விசாரணை ஒன்றை எதிர்நோக்கி இருக்கின்றார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தமை மூலம் அரசின் – ஆளுந்தரப்பின் – கைக்கூலியாகத் தான் இல்லை என்பதை காட்டும் நடவடிக்கைகளை சிறிதரன் ஆரம்பித்திருக்கிறார் எனக் கருத முடிகிறது.

எவ்வளவு தூரம் இந்தப் போக்குத் தொடரும் என்பதை பார்த்திருப்போம்.

---

## வடக்கு மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நேற்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

"அரசு என்ற வகையில் நாட்டினுடைய அபிவிருத்தியை எந்தத் தடைகளும் இல்லாமல் மேற்கொண்டு வருகின்றோம்.

அந்தவகையில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் பொதுமக்கள் காத்திருப்பு பகுதி வேலைகள் முடிவுறும் தருவாயில் உள்ள நிலையில் அடுத்த கட்ட செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றோம்.

கடந்த அரசில் குறித்த விமான நிலையம் ஆரம்பிக்கப்பட்டாலும் முழுமையான விமான நிலையமாக மாற்றம் பெறாத நிலையில் எமது அரசு அதனை முழுவீச்சில் செயற்படுத்தி வருகின்றது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் காத்திரமான பங்களிப்பை மேற்கொள்ளும் என்பதில் எமக்கு நம்பிக்கை இருக்கின்றது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் விமான சேவைகளை விரிவுபடுத்துவது தொடர்பில் விமான சேவைகள் நிறுவனங்களுடன் கலந்துரையாடி வருகின்ற நிலையில் சேவைகளை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும்.

அதேபோல் காங்கேசன் துறைமுக அபிவிருத்திப் பணிகளை விரிவுபடுத்துவது தொடர்பில் ஆராய்ந்து வரும் அதேவேளை மயிலிட்டி துறைமுக அபிவிருத்தியை மேற்கொள்வதற்காக சுமார் 400 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் மயிலிட்டி துறைமுகம் விடுவிக்கப்பட்டாலும் அதனுடைய அபிவிருத்திப் பணிகள் இடைநடுவில் விடப்பட்ட நிலையில் நாட்டினுடைய தற்போதைய ஜனாதிபதியே அநுரகுமார திஸாநாயக்க அதனை மேற்கொள்வதற்காக வரவு – செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கியுள்ளார்.

அதேபோல் யாழ். கொழும்புத்துறை இறங்குதுறை மற்றும் குறிகாட்டுவான் இறங்குதுறை அபிவிருத்திகள் இந்த வருட இறுதிக்குள் முடிவுறுத்தப்படும்.

எது அரசு நாட்டில் வாழுகின்ற சகல இன, மத மக்களை இணைத்துக் கொண்டு புதியதொரு மாற்றத்தை ஏற்படுத்தும் ஓர் அரசாக ஆட்சிக்கு வந்தது யாவரும் அறிந்த விடயம்.

எமது அரசின் பயணத்தைத் தடுத்த நிறுத்தலாம் எனச் சிலர் நினைக்கின்றார்கள். காரணம் கடந்த காலங்களைப் போல் திருடர் யுகம் ஒன்றை மீண்டும் கொண்டு வருவதற்காக அவர்கள் துடிக்கின்றார்கள்.

இந்த நாட்டை மீண்டும் ஒரு அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்வதற்கு இன்னும் சிலர் இனவாதத்தை கையில் எடுக்கின்றார்கள். அது அவர்களின் அரசியல் இருப்புக்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் இழந்து போன அரசியலை மீண்டும் புத்துயிர் கொடுப்பதுக்குமே.

ஆகவே வடக்கு மக்களுக்குத் தெளிவாக ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன், எமது அரசு மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஓர் அரசாகச் செயற்படும் அதேவேளை அபிவிருத்திப் பணிகளையும் தொடர்ச்சியாக முன்னெடுக்கும்." – என்றார்.

---

## நன்கு கட்டமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தனது திட்ட அறிக்கையில் வெளிப்படையாகவே இந்த நீர்த்தேக்கத்தின் பயனாளிகள் 3 ஆயிரத்து 203 சிங்களக் குடும்பங்கள் எனத் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தால் பாரம்பரிய தமிழ் கிராமங்களான வெடிவைத்த கல்லு, ஈச்சங்குளம், கூழாங்குளம், காஞ்சூரமோட்டை போன்ற கிராமங்களின் 400 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய மற்றும் குடியிருப்பு நிலங்கள் நீரினுள் மூழ்கும் நிலை காணப்படுகின்றது.

மேலும் 47 தொல்லியல் பிரதேசங்களும் கிவுல் ஓயாவினுள் மூழ்கிப் போகவுள்ளது என்பதனை மகாவலி அதிகார சபையின் திட்ட அறிக்கையின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

இந்தத் தகவல்கள் அனைத்தையும் மூடிமறைத்துள்ள கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், "தமிழ் அரசியல்வாதிகளின் கருத்துக்கள் பொய்" என்று கூறியுள்ளார். அவரின் இந்தக் கருத்தை தமிழர் மரபுரிமைப் பேரவை வன்மையாகக் கண்டிக்கின்றது. இவர்கள் வடக்கில் மக்களை அரவணைப்பது போல் நாடகமாடி முதுகில் குத்தும் வேலையை கச்சிதமாகச் செய்து வருகின்றார்கள்.

இலங்கைத் தீவில் நிலையான அபிவிருத்தி, சமாதானம், சமத்துவம் மற்றும் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாயின் இவ்வாறான திட்டமிட்ட இன அழிப்புகள் நிறுத்தப்பட வேண்டும். இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராகத் தமிழ் மக்கள் எந்த விட்டுக்கொடுப்பும் இல்லாமல் போராடுவார்கள்." – என்றுள்ளது.





# அடிப்படை வசதிகள் ஏதுமற்று இயங்கும் தண்ணீரூற்று தமிழ்க் கலவன் பாடசாலை

தொடர்ச்சி▲

நுளம்புகள் பெருகி மாணவர்களுக்கு நோய்த்தொற்றுக்கள் ஏற்படும் அபாயங்கள் காணப்படுவதுடன், மாணவர்கள் இணைபாடவிதானச் செயற்பாடுகளில் ஈடுபடமுடியாத நிலை காணப்படுவதாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

பாடசாலையில்காணப்படுகின்ற வகுப்பறைக் கட்டடங்கள் உள்ளிட்ட அனைத்து விதமான கட்டடங்களும் பழைய கட்டடங்களாகக் காணப்படுகின்றமையும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் வகுப்பறைக் கட்டடங்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டு ஆபத்தான நிலையில் காணப்படுவதையும், அந்த வெடிப்புக்களின் ஊடாக நீர் ஊற்றெடுத்து வகுப்பறைகளுக்குள் காணப்படுவதையும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் பார்வையிட்டார்.

பாடசாலையின் சுற்றுப்புறச்சூழல் மற்றும் வகுப்பறைக் கட்டடம் என்பன இவ்வாறு வெகுவாகப்பாதிக்கப்பட்டுக் காணப்படுவதனால் இப் பாடசாலையில் மாணவர்களை இணைப்பதற்கு பெற்றோர்கள் அஞ்கின்றனர் எனவும், இதனால் இந்தப் படசாலையின் மாணவர் எண்ணிக்கையும் குறைவடைந்து செல்வதாகவும் பாடசாலை நலன்விரும்பிகள் இதன்போது கவலை வெளியிட்டனர்.

இந்நிலையில் இந்தப் பாடசாலையின் குறைபாடுகளைச் சீர்செய்வது தொடர்பில் தம்மால் கவனம் செலுத்தப்படுமென நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது தெரிவித்திருந்தார்.









# யாழ். சிறை பெண் அலுவலருக்கு பாலியல் தொல்லை எனப் புகார்!

(என்.புவியரசன்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் பணியாற்றும் பெண் உத்தியோகத்தர் மீது சக ஆண் உத்தியோகத்தர்கள் பாலியல் தொல்லை என யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் பணியாற்றும் தென்னிலங்கையைச் சேர்ந்த பெண் உத்தியோகத்தர் சிறைச்சாலையில் பணியாற்று சக தென்னிலங்கை உத்தியோகத்தர்களாலேயே பாலியல் தொல்லைக்கு உள்ளாகின்றனர் என முறையிட்டுள்ளார்.

முறைப்பாட்டின் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்ட 3 சிறைச்சாலை உத்தியோகத்தர்களில் இருவர் நேற்று முன்தினம் பொலிஸ் நிலையம் அழைக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட் டமையோடு, மூன்றாவது உத்தியோகத்தரை எதிர் வரும் திங்கள் கிழமை சமுகமளிக்குமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## காலம் பிந்திய ஞானம்

யுத்தத்தின் காரணமாக நாட்டை விட்டு இடம்பெயர்ந்து இந்தியாவுக்குச் சென்ற அகதிகள், ஐ.நா. அகதிகள் தூதரகத்தின் ஏற்பாட்டோடு அங்கிருந்து தாயகம் திரும்பும் சமயம் கைது செய்யப்படுகின்ற நிலைமை குறித்து அண்மை காலத்தில் தொடர்ந்து செய்திகள் வெளியாகி வந்தன. இலங்கைப் பாதுகாப்புத் தரப்பினரின் இந்தத் தேவையற்ற - அர்த்தமற்ற - கெடுபிடி காரணமாக, முன்னர் யுத்தகாலத்தில் இந்தியா சென்ற தமிழ் அகதிகள் மீள நாடு திரும்ப முடியாத நிலைமை நீடித்தது. அகதிகளைத் திருப்பித் தாயகம் அனுப்பும் பணியை ஐ.நா. அகதிகள் தூதரகமும் இடைநிறுத்தி உள்ளது.

இந்தப் பின்புலத்தில், நாட்டில் நிலவிய உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக, முறையற்ற வகையில் வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் மீண்டும் தாயகம் திரும்பும் போது, எவ்வித இடையூறுகளுமின்றி, நாட்டுக்குள் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், அதன்படி, தற்போதுள்ள குடிவரவு - குடியகல்வுச் சட்டத்தின் சில நிபந்தனைகளை மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்திருக்கின்றார்.

சட்டத்தில் உள்ள நிபந்தனைகளில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பில் சட்ட மா அதிபரின் பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார். சட்ட மாஅதிபரின் பரிந்துரைகளுக்கு அமைய, உரிய சட்ட நடவடிக்கைகளைப் பின்பற்றி, அவற்றை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஏற்கனவே அமைச்சரவைக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்திருக்கின்றார்.

இந்தச் சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், தாயகம் திரும்பும் இலங்கையர்களை எவ்வித இடையூறுகளுமின்றி, நாட்டுக்குள் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆயினும், நாடு திரும்புவோர், போர்க்காலச் சூழலில் நாட்டிலிருந்து சென்று, தாம் ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பின் கீழ் வசித்தமைக்கான சான்றுப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், இந்தியாவில் தங்கியுள்ள இலங்கையர்கள் தொடர்பில், அந்த நாட்டு அதிகாரிகளுடன் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டுள்ளது. தாயகம் திரும்ப விரும்புவோரின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் தனிப்பட்ட தகவல்கள் கோரப்பட்டுள்ளன என்றார் அவர்.

முன்னதாக, இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய சிலர், விமான நிலைய அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டு, அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தன. இந்த நடவடிக்கைகளை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகமும் ஆட்சேபித்திருந்தது.

இந்த பின்னணியிலேயே, குடிவரவு, குடியகல்வு சட்டத்திலுள்ள நிபந்தனைகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு இப்போது தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. எப்போதோ செய்யப்பட்டிருக்க வேண்டிய வேலை இது. யுத்தம் முடிந்து பதினாறு ஆண்டுகள் கழித்து இப்போதுதான் கொழும்புக்கு இவ்விடயத்தில் ஞானம் பிறந்திருக்கின்றது.



# பாதிப்படைந்த தொழில் முனைவோருக்கு வவுனியாவில் இழப்பீடு வழங்கல் நிகழ்வு!

**(கி.வசந்தன்)**

வவுனியாவில் டித்வா சூறாவளி மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 63 சிறு தொழில்கள் மற்றும் தொழில் முனைவோருக்கு இழப்பீடு கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சரால் வழங்கி வைக்கப் பட்டது.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இந்நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது வவுனியாவில் டித்வா சூறாவளி மற்றும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட 63 பேருக்கு தலா இரண்டு லட்சம் ரூபா வீதம் 12.6 மில்லியன் ரூபா நிதி வழங்கி வைக் கப்பட்டது.

கூட்டுறவுத் துறை பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, வவுனியா மாவட்ட செயலாளர் பி.ஏ. சரத்சந்திர ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் கலஞ்சலி டி.அருணாசாந்தா, வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் காஞ்சன குமார, தொழில் முயற்சியாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.















# மன்னாரில் வீதி அமைத்துத் தரக் கோரிய நபருக்கும் நகர சபைத் தலைவருக்கும் இடையில் கைகலப்பு!

## காயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதி

(மன்னார் நிருபர்)

மன்னார் பாத்திமா புரம் பகுதியில் வீதி ஒன்றை அமைக்கும் போது அந்த இடத்தில் எமில் நகர் பகுதியை சேர்ந்த நபர் ஒருவருக்கும் மன்னார் நகரசபை தலைவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய் தர்க்கம் கைகலப்பாகி அடிதடியில் முடிந் தது. எமில் நகர் பகுதியை சேர்ந்த அந்த நபர் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருபவை வருமாறு:-

மன்னார் நகர சபைக்கு சொந்தமான எமில் நகர் எல்லையில் உள்ள பாத்தி மாபுரத்தில் நகர சபைக்கு சொந்தமான வீதிகளில் கிரவல் பரப்பும் நடவடிக்கை இடம் பெற்று வந்த நிலையில் அப் பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் தங்கள் பகுதி வீதியையும் அமைத்து தருமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

அந்த நபர் தமது வீதியை அமைத்துத் தரக் கோரி தொடர்ச்சியாகப் பலமுறை நகரசபை தலைவரிடம் முன்னதாகவே கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில் நேற்றைய தினம் வீதியை அமைக்கும் பணியை மேற் கொண்டிருந்த மன்னார் நகரசபைத் தலைவரிடம் நேரடியாகச் சென்று "நீண்ட காலமாக கோரிக்கை விடுத்தும் எங்கள் பகுதி வீதியை அமைக்காது தனிப்பட்ட நபர் ஒருவருக்காக இந்த வீதியை அமைக்க முன்னிற்பது சரியா?" என கேள்வி எழுப்பினார்.

இந்த நிலையில் இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் அந்த நபரை அவ்விடத்தில் இருந்து வெளியேறுமாறு நகரசபை தலைவர் தெரிவிக்க அவர் வெளியேற மறுத்துள்ளார்.

இதனை தொடர்ந்து நகரசபை தலைவர் அந்த நபரைத் தள்ளி விட்டு அவர் மீது தாக்குதல் நடத்தினார் என வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நபர் தெரிவித்துள்ளார்.

அதனை தொடர்ந்து இருவரும் மாறி மாறி தாக்கிக்கொண்ட நிலையில் பரஸ்பரம் கற்களாலும் எறிந்து கொண டுள்ளனர்.

இந்த நிலையில் அதிக அளவு தாக்குத லுக்கு உள்ளான எமில் நகரை சேர்ந்த நபர் காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சண்டையின் போது கற்கலால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது அங்கே இருந்த நகர சபை பெண் உறுப் பினர் மீது கற்கள் எறியப்பட்ட நிலையில் அந்தச் சம்பவம் தொடர்பில் பெண் உறுப் பினரும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மது சாலைகளில் போத்தல் கள்ளு விற்பனை; மன்னாரில் சீவல் தொழிலாளருக்குப் பாதிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் நகர சபைக்கு உட்பட்ட மதுபான சாலைகளில் போத்தல் கள்ளு விற்பனை செய்யப்படுவதால் மன்னார் சீவல் தொழிலாளர்களின் குடும்பங்கள் வாழ்வாதர கஷ்டத்திற்கு உள்ளாகி வருகின்றன என சீவல் தொழிலாளர் சங்கம் மன்னார் நகர சபையின் கவ னத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

மன்னார் நகர சபை எல்லைக்கு உட்பட்ட சீவல் தொழிலாளர் சங்கம், மன்னார் நகர சபை முதல்வருக்கு அனுப்பி வைத்த்ய்ள்ள கடிதத்தில் மன்னார் நகர சபைக்கு உட்பட்டுக் காணப்படுகின்ற எமது சங்கத்திற்கு சொந்தமான கள்ளுத் தவறணைகளில் நான்கு தவறணைகள் அதாவது மன்னார், பள்ளிமுனை, டிப்போ, கீரி ஆகிய நான்கு கள்ளுத் தவறணைகள் இயங்கி வருகின்றன.

பனங்கள்ளு உற்பத்திக்கான பருவக் காலம் தை தொடக்கம் ஆடி மாதம் வரையாகும். இக்காலப்பகுதியில் இச் சங்கத்தின் சீவல் தொழிலாளர்களாகிய உறுப்பினர்கள் கள்ளு உற்பத்தியில் ஈடுபடுகின்றார்கள். இதன் மூலமே இவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்லுகின்றனர்.

தற்பொழுது 2026 ஆம் ஆண்டுக் குரிய கள்ளு உற்பத்தியில் இப்பகுதியி லுள்ள சீவல் தொழிலார்கள் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

இக்காலப் பகுதியில் மன்னார் நகர சபைக்கு உட்பட்ட இரண்டு தனியார் மதுபானைசாலைகளில் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு விற்பனை செய் யப்படுகின்றன. இதனால் இங்குள்ள சீவல் தொழிலாள்களின் உள்ளுர் உற்பத்தியான பளங்கள்ளை கீழே ஊற்ற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது. ஆகவே இதனைக் கருத்திற் கொண்டு தங்களின் ஆளு கைக்கு உட் பட்ட மதுபானசாலைகளில் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு விற் பனை செய்யப்படுவதை நிறுத்துவதற் குரிய நடவடிக் கையை மேற்கொள்ளும் படி வேண்டுகின்றோம். - என அக் கடிதத்தில் வேண்டப்பட்டுள்ளது.

SITPI ACADEMYயோடு இணைந்து

தமிழ் one tv வழங்கும்

# தமிழ் மரபுத் திங்கள்



**THEME :**

**தாய் நிலம், நமது மண், நமது வேர்**

**OUR LAND, OUR ROOTS**

*BLESSED PIER GIORGIO FRASSATI*
*8 SEASONS DRIVE*
*SCARBOROUGH, ON*

*SATURDAY*
*JAN 31 2026*
*10AM - 12.30 PM*

AERO COURIER
Fast & Secure World Wide Service

VARNAM'S
PETALS AND POOJA

முரசு



# திருமதி உலக அழகு ராணிப் போட்டியில் மூன்றாமிடத்தைப் பிடித்தார் சபீனா யூசுப்

திருமதி உலக அழகு ராணிப் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய சபீனா யூசுப் மூன்றாம் இடத்தைப் பிடித்தார்.

திருமதி உலக அழகு இராணிப் போட்டியின் இறுதிக் கட்டம் அமெரிக்காவின் லாஸ்வேகாஸ் நகரில் நடைபெற்றது.

உலகின் மிகவும் பிரபல்யமான, நீண்ட காலமாக நடைபெற்று வரும் சர்வதேச அழகு இராணிப் போட்டி இதுவாகும்.

இந்த போட்டியில் 60 இற்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த போட்டியாளர்கள் பங்கேற்றனர்.

இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்தி சபீனா யூசுப் களமிறங்கினார்.

திருமதி உலக அழகு ராணிப் போட்டியில் தாய்லாந்தைச் சேர்ந்த சனீதா சீடாகெத் க்ரேதோன் கிரீடத்தை சூடினார்.

இரண்டாவது இடத்தை அமெரிக்காவைச் சேர்ந்த பேஜ் எவிங் வென்றார்.

மூன்றாம் இடத்தை இலங்கையைச் சேர்ந்த சபீனா யூசுப் பெற்றுக் கொண்டார்.

போட்டோஜெனிக் பிரிவில் 60 நாடுகளை வீழ்த்தி அவர் முதலிடத்தை சுவீகரித்தார்.

# சுகாதார சீர்கேடுகளுடன் உணவு பொருளை களஞ்சியப்படுத்தியவருக்கு தண்டப்பணம்


பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில், சுகாதார சீர்கேடுகளுடன் உணவுப் பொருள்களை களஞ்சியப்படுத்திய பல்பொருள் அங்காடியொன்றின் உரிமையாளருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தினால்

72,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பல்பொருள் அங்காடியில் பழுதடைந்ததும் மனிதநுகர்விற்கு ஏற்றதல்லாததுமான பொருள்கள், எலி எச்சங்களுடன் கூடிய பொருள்கள், காலாவதியான உணவுப்பொருள்கள் மற்றும் மூல உற்பத்தி திகதி மற்றும் காலாவதி திகதி போன்றவை இல்லாமல் உணவுப்பொருள்களை களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை சோதனையின் போது கண்டறியப்பட்டது.

இது தொடர்பில் மேற்படி வியாபார நிலைய உரிமையாளரிற்கு எதிராக பருத்தித்துறை நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் ப. தினேஸினால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்றைய தினம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையின் போது குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்ட நிலையில், எச்சரிக்கையுடன் 72,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.




# நிபா வைரஸ் குறித்து அச்சமடைய வேண்டாம்

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

இந்தியாவின் பல பகுதிகளில் பரவிவரும் நிபா வைரஸ் இலங்கையில் பரவும் அபாயம் இல்லை என சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் பொதுமக்கள் தேவையற்ற விதத்தில் அச்சமடைய வேண்டாம் எனவும் சுகாதார பிரதி அமைச்சர் டொக்டர் ஹங்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

இந்த வைரஸை அடையாளம் காண்பதற்கு தேவையான அனைத்து வசதிகளும் நாட்டில் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் அண்மையில் நிபா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.




# 78 ஆவது சுதந்திரதின நிகழ்வுகளுக்கான ஒத்திகைகளுக்காக போக்குவரத்து திட்டம்

78ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் எதிர்வரும் 4 ஆம் திகதி கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ளன.

இதனை முன்னிட்டு கொழும்பு சுதந்திர சதுக்க வளாகத்தில் விசேட ஒத்திகை நடைபெறுகின்றது.

இதன் காரணமாக கொழும்பு சுதந்திர சதுக்க வளாகத்தை சூழவுள்ள வீதிகளில் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விசேட போக்குவரத்து திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

காலை 7.45 முதல் பிற்பகல் 1.30 வரையான காலப்பகுதியில் இந்தப் போக்குவரத்துத் திட்டம் நடைமுறையில் இருக்குமென போக்குவரத்து, கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்பு பிரதிப் பொலிஸ் மா அதிபர் டபிள்யூ.பி.ஜே.சேனாதீர தெரிவித்தார்.

# இலங்கையின் தற்போதைய கையிருப்பு 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்

2025 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் தற்போதைய கையிருப்பு 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மேலதிகத்தைப் பதிவு செய்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டின் பெரும்பாலான மாதங்களில் இந்த மேலதிக நிலை காணப்பட்டமை பொருளாதாரத்திற்கு ஒரு சாதகமான அறிகுறியாகப் பார்க்கப்படுகிறது.

புலம்பெயர்ந்து வாழும் தொழிலாளர்கள் நாட்டுக்கு அனுப்பிய வருமானம் 2025 இல் 8 பில்லியன் டொலர்களைத் தாண்டியுள்ளது.இது 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 22.8 சதவீத வளர்ச்சியாகும். அத்தோடு, சுற்றுலாப் பயணிகளின் வருகை 2018 ஆம் ஆண்டை விட 15.1 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

எனினும், அதனூடாகக் கிடைத்த வருமானம் 1.6 சதவீதத்தால் மாத்திரமே உயர்ந்துள்ளது. ஏற்றுமதி வருமானம் அதிகரித்த போதிலும், இறக்குமதிகள் அதிகரித்தமையால் வர்த்தகப் பற்றாக்குறை 7.9 பில்லியன் டொலர்களாக உயர்ந்துள்ளது.

குறிப்பாக, வாகன இறக்குமதிக்காக 2025இல் மாத்திரம் 2.05 பில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், நாட்டின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பு 2025 முடிவில் 6.8 பில்லியன் டொலர்களாக உயர்ந்துள்ளது.

அத்தோடு, 2025ஆம் ஆண்டில் ரூபாயின் பெறுமதி ஓரளவு வீழ்ச்சியடைந்த போதிலும், 2026 ஜனவரியில் அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபா 0.2 சதவீதத்தினால் வலுவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



# துப்பாக்கி உரிமத்தை புதுப்பிப்பதற்கான காலக்கெடு இன்றுடன் நிறைவடைகிறது

## பாதுகாப்பு அமைச்சு அவசர அறிவிப்பு

துப்பாக்கி உரிமம் வைத்திருக்கும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் 2026 ஆம் ஆண்டிற்காக தமது உரிமங்களைப் புதுப்பித்துக் கொள்வதற்கான காலக்கெடு தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சு முக்கிய அறிவித்தலொன்றை வெளியிட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டிற்கான துப்பாக்கி உரிமங்களைப் புதுப்பிப்பதற்கான காலக்கெடு இன்றுடன் நிறைவடைகிறது.

இன்று உரிமத்தைப் புதுப்பிக்கத் தவறுபவர்கள், துப்பாக்கிச் சட்டக் கட்டளையின் 22 ஆவது பிரிவின்படி, அபராதத் தொகையைச் செலுத்தி பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் தமது உரிமங்களை அத்தியாவசியமாகப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

பெப்ரவரி 10 ஆம் திகதிக்கு பின்னரும் உரிமத்தைப் புதுப்பிக்காத அனைத்து உரிமையாளர்களுக்கும் எதிராக, செல்லுபடியாகும் உரிமமின்றி துப்பாக்கியைத் தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பாதுகாப்பு அமைச்சு எச்சரித்துள்ளது.



எனவே, தேவையற்ற சட்டச் சிக்கல்களைத் தவிர்க்கும் பொருட்டு, உரிய காலப்பகுதிக்குள் உரிமத்தைப் புதுப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# கடனட்டை முடக்கம், போலி அழைப்பு; பொதுமக்களுக்கு அவசர எச்சரிக்கை

இலங்கையில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் கடனட்டை மோசடிகள் மற்றும் பொலிஸ் போன்று ஆள்மாறாட்டம் செய்து முன்னெடுக்கப்படும் பண மோசடிகள் குறித்து இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு மற்றும் இலங்கை பொலிஸ் எச்சரிக்கை விடுத்துள்ளன.

சந்தேகத்திற்கிடமான நடவடிக்கை காரணமாகஉங்கள்கடனட்டைமுடக்கப்பட்டுள்ளதாகக் கூறி பரப்பப்படும் போலி குறுஞ்செய்திகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் போன்று நடித்து மேற்கொள்ளப்படும் பண மோசடிகள் குறித்து பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

உங்கள் கடனட்டை முடக்கப்பட்டுள்ளது, 24 மணித்தியாலங்களுக்குள் அதனைச் சரிசெய்யாவிடில் அது ரத்து செய்யப்படும் என்றவாறு போலி இணைப்புகள் உள்ளடக்கிய குறுஞ்செய்திகள் அனுப்பப்படுகின்றன.

அந்த இணைப்புகளை அழுத்துபவர்கள் தமது தேசிய அடையாள அட்டை இலக்கம் உள்ளிட்ட தனிப்பட்ட விவரங்களை வழங்கத் தூண்டப்படுகின்றனர்.

பின்னர், மோசடிக்காரர்கள் அந்த விபரங்களைப் பயன்படுத்தி பாதிக்கப்பட்டவர்களின் ஓ.ரி.பி. இலக்கத்தைப் பெற்று வங்கிக் கணக்குகளிலுள்ள பணத்தைத் திருடுகின்றனர்.

வட்ஸ்அப் காணொலி அழைப்புகள் மூலம் பொலிஸ் சீருடை அணிந்த நபர்கள் போன்று நடித்து மோசடிகள் அரங்கேற்றப்படுகின்றன.

கைது செய்யப்பட்டுள்ள ஒரு குற்றவாளி உங்கள் அடையாள அட்டையைப் பயன்படுத்தி மோசடி செய்துள்ளார் எனக் கூறி மிரட்டி, கைது செய்யாமல் இருக்க பணத்தை அனுப்புமாறு அவர்கள் வற்புறுத்துகின்றனர்.

ஏதேனும் சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகள் இருப்பின் உடனடியாக இலங்கை CERT (011 269 1062 / incidents@cert.gov.lk) அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அல்லது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் பிரிவுக்கு முறைப்பாடு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.





# இலங்கை பொலிஸில் 32,000 வெற்றிடங்கள்

## விரைவில் 10,000 பேர் ஆள்சேர்ப்பு

இலங்கை பொலிஸ் சேவையில் தற்போது சுமார் 32,000 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன என பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் கீழ் பணியாற்றும் கைரேகை நிபுணர்கள், குற்றப் பகுப்பாய்வு உத்தியோகத்தர்கள் மற்றும் தடயவியல் புகைப்படக் கலைஞர்களின் பங்களிப்பைப் பாராட்டும் வகையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் குறிப்பிட்டார்.

பொலிஸ் திணைக்களத்தில் இருக்க வேண்டிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை விட தற்போது 32,000 பேர் குறைவாகவே பணியாற்றி வருகின்றனர்.

இந்த ஆண்டில் சுமார் 2,500 உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறவுள்ளனர். அத்துடன், அடுத்த ஆண்டில் மேலும் 2,700 உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறவுள்ளனர் என கணக்கிடப்பட்டுள்ளது.

நிலவும் ஆள்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக முதற்கட்டமாக 10,000 புதிய உத்தியோகத்தர்களைப் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ள எதிர்பார்த்துள்ளதாக பொலிஸ் மா அதிபர் சுட்டிக்காட்டினார்.

குற்றங்களைத் தடுப்பதற்கும் சட்ட ஒழுங்கைப் பாதுகாப்பதற்கும் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதுடன், மனித வளத்தை அதிகரிப்பதும் அவசியம் என அவர் இதன்போது வலியுறுத்தினார்.



# ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட 5 சந்தேகநபர்களின் விளக்கமறியல் நீடிப்பு

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட 5 சந்தேக நபர்களை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி சந்தேக நபர்களுக்கு எதிரான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதற்கமைய, மேற்படி சந்தேக நபர்களை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் இதன்போது உத்தரவிட்டார்.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சராக இருந்த போது, “சதொச” நிறுவனத்திற்குச் சொந்தமான பாரவூர்தி ஒன்றை முறைக்கேடாக பயன்படுத்தியமை தொடர்பில் குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

# இதுவரை கூட்டணி அமைப்பதற்கு முடியாமல் தவிக்கும் தே.மு.தி.க.



சட்டப்பேரவை தேர்தல் அறிவிப்பு இன்னும் சில வாரங்களில் வெளியாகவுள்ள சூழலில், இதுவரையிலும் கூட்டணியை இறுதி செய்ய முடியாமல் தவித்து வருகிறது தே.மு.தி.க.

தே.மு.தி.க. கடைசியாக மக்கள் பிரதிநிதிகளை அனுப்பியது 2011 சட்டப்பேரவைத் தேர்தல்தான். அதன்பின்னர் பல அணிகள் மாறி மாறி கூட்டணி அமைத்தாலும், ஒரு இடத்திலும் அக்கட்சியால் வெல்ல முடியவில்லை. 2024 தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் கடைசி நேரத்தில் சேர்ந்து 5 தொகுதிகளில் போட்டியிட்டது தே.மு.தி.க. அந்த கூட்டணியே தோல்வியடைந்த நிலையில், விருதுநகரில் போட்டியிட்ட விஜய பிரபாகரன் மட்டும் வெற்றியின் விளிம்பு வரை சென்று தோல்வியடைந்தார்.

அதன்பின்னரும் அ.தி.மு.கவோடு நல்லுறவுதான் தே.மு.திகவுக்கு இருந்தது. ஆனால், ராஜ்யசபா சீட் கொடுக்காத விரக்தியில் அ.தி.மு.கவுடனான உறவை துண்டித்து, தி.மு.க. பக்கமும் துண்டு போட ஆரம்பித்தது தே.மு.தி.க. அதனால், இரு அணிகளிடம் கூட்டணி அமைக்கும் வகையில் கதவுகளை திறந்துவைத்தார் பிரேமலதா.

சட்டப்பேரவை தேர்தல் நெருங்கிவிட்ட நிலையில், தி.மு.கவும், அ.தி.மு.கவும் தங்கள் கூட்டணியை கிட்டத்தட்ட இறுதி செய்துவிட்டது. கொஞ்சம் முரண்டுபிடித்த அன்புமணியையும், தினகரனையும் கூட்டணி மேடையில் ஏற்றினார் பிரதமர் மோடி. அப்போது எப்படியும் தே.மு.தி.க, என்.டி.ஏ. கூட்டணியில் இணைக்கப்படும் என்ற பேச்சு நிலவியது. ஆனால், எங்களிடம் யாரும் கூட்டணி பேச்சுவார்த்தையே நடத்தவில்லை என்று பிரேமலதா தெரிவித்தார்.

தே.மு.தி.க. 2011ல் தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சியாக இருந்தது. ஒரு கட்டத்தில் தமிழகத்தின் மாற்று சக்தியாக விஜயகாந்த் பார்க்கப்பட்டார். ஆனால், அந்த காலமெல்லாம் இப்போது மாறிவிட்டது. இருந்தாலும், பிரேமலதாவும், அவரின் மகன் விஜய பிரபாகரனும் அதே மனநிலையில்தான் உள்ளனர் என்கின்றனர் அரசியல் விமர்சகர்கள்.

இதனை மனதில் வைத்துக்கொண்டு எடுத்த எடுப்பிலேயே 20 சட்டப்பேரவை தொகுதிகள், ஒரு ராஜ்யசபா ஆசனம் என்ற நிபந்தனையுடன் பேச்சுவார்த்தையையே தொடங்குகிறதாம் தே.மு.தி.க.. அதனால்தான், முதற்கட்ட பேச்சுவார்த்தையோடே இரு பெரும் கட்சிகளும் வெளியேறிவிட்டன.

# ஐரோப்பிய யூனியன் உடனான ஒப்பந்தத்தால் இந்தியாவின் மதிப்பு உயர்வடைந்துள்ளது

## வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல்

ஐரோப்பிய யூனியனுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளதை அடுத்து, சர்வதேச அரங்கில் இந்தியாவின் மதிப்பு உயர்ந்துள்ளது என்று வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான பேச்சுவார்த்தை கடந்த 27 ம் தேதி நிறைவடைந்தது. இந்த ஒப்பந்தம் இந்த ஆண்டு இறுதிக்கும் நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தம் தொடர்பாக தொடர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வந்த பியூஷ் கோயல், பேச்சுவார்த்தை நிறைவடைந்ததை அடுத்து சர்வதேச செய்தி நிறுவனத்துக்கு அவர் வழங்கிய நேர்காணலில்,



“ஐரோப்பிய யூனியனுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இந்தியாவை புவிசார் அரசியலின் உயர் அடுக்கில் அமர்த்துகிறது. பிரதமர் மோடியின் தலைமையின் கீழ் இந்தியா, உலகம் முழுவதும் அங்கீகாரத்தையும் முக்கியத்துவத்தையும் பெற்றுள்ளது.

உலகின் வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதாரம், வலுவான பொருளாதார அடிப்படைகளைக் கொண்ட நாடு, 140 கோடி மக்களைக் கொண்ட மிகப் பெரிய சந்தை, திறமைகளும், ஆற்றலும் நிறைந்த லட்சியமிக்க இளம் இந்தியா என உலக நாடுகள் இந்தியாவைப் பார்க்கின்றன.

இன்று உலகெங்கிலும் உள்ள வளரும் நாடுகளால், ஒரு வர்த்தக பங்காளியாக் கூட்டாளியாக இந்தியா பார்க்கப்படுகிறது. இதுபோன்ற ஒப்பந்தங்களை மேற்கொள்ள கடந்த காலங்களில் இந்தியா தயக்கம் காட்டியது. தற்காப்பு மனப்பான்மையுடனும், எச்சரிக்கையுடனும் நாம் இருந்தோம். பெரிய சவால்களை எதிர்கொள்ள நாம் தயங்கினோம். பிரதமர் மோடியின் தலைமை காரணமாக, இப்போது 2047 ஆம் ஆண்டுக்குள் வளர்ந்த நாடாக மாற இந்தியா விரும்புகிறது. நமது சர்வதேச இருப்பு, வணிகம், ஈடுபாடுகளை விரிவுபடுத்தாமல் இந்த இலக்கை நாம் அடைய முடியாது.

இந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் என்பது 27 வளர்ந்த நாடுகளுடன், பரஸ்பரம் உதவிக்கொள்வதற்கும் ஒன்றையொன்று பூர்த்தி செய்து கொள்வதற்கும்வழிவகுத்துள்ளது. அவர்களிடம்வெவ்வேறு திறன்களும், தயாரிப்புகளும் உள்ளன.

நம்மிடம் நமக்கானவை உள்ளன. இந்த ஒப்பந்தத்தின் மூலம் நாம் ஒரு கூட்டு சக்தியாக மாறுகிறோம். இதுதான் இந்த ஒப்பந்தத்தின் சிறப்பு. இந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களுக்கு பாதுகாப்பை வழங்குகிறது. ’ என தெரிவித்தார்.





# தூதுவரை வெளியேற்றிய தென்னாப்பிரிக்கா; பதிலடி கொடுத்தார் பெஞ்சமின் நெதன்யாகு

தென்னாப்பிரிக்காவிற்கான இஸ்ரேலியத் தூதரக அதிகாரி ஏரியல் சீட்மேன், இராஜதந்திர நெறிமுறைகளை மீறினார் என கூறி, அவரை அந்நாட்டைவிட்டுவெளியேறுமாறுதென்னாப்பிரிக்கவெளிவிவகாரஅமைச்சுஉத்தரவிட்டது.

அவருக்கு 72 மணித்தியாலங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில், இஸ்ரேல் அரசாங்கம் பலஸ்தீனத்திற்கான தென்னாப்பிரிக்கத் தூதுவர் ஷான் எட்வர்ட் பைனெவெல்ட்டை அந்நாட்டை விட்டு வெளியேறுமாறு அறிவித்துள்ளது.

சர்வதேச நீதிமன்றத்தில் இஸ்ரேலுக்கு எதிராக தென்னாப்பிரிக்கா இனப்படுகொலை குற்றச்சாட்டுகளை முன்வைத்ததில் இருந்தே இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு மிகவும் மோசமடைந்துள்ளது.

இந்தநிலையில், தூதுவர் சீட்மேன் தனது உத்தியோகபூர்வ சமூக வலைத்தளங்கள் ஊடாக தென்னாப்பிரிக்க ஜனாதிபதி சிறில் ராமபோசாவை விமர்சித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேலும், தென்னாப்பிரிக்க அரசின் அனுமதியின்றி இஸ்ரேலிய அதிகாரிகளை நாட்டிற்குள் அழைத்தமை மற்றும் ஒரு பிராந்திய மன்னருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியமை போன்ற குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நெல்சன் மண்டேலாவின் மருமகனும், சர்ச்சைக்குரிய மன்னருமான புயெலேகாயா டாலிண்டியேபோ, கடந்த டிசம்பர் மாதம் இஸ்ரேலுக்கு விஜயம் செய்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து இஸ்ரேலிய குழுவொன்று மன்னரின் மாகாணத்திற்குச் சென்று உதவித் திட்டங்களை அறிவித்திருந்தது.

இந்நடவடிக்கையை"ஒருதலைப்பட்சமானது மற்றும் அடிப்படையற்றது" என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் வெளியுறவு அமைச்சர் கிதியோன் சார் ஆகியோர் வர்ணித்துள்ளனர்.

தென்னாப்பிரிக்காவின் இந்த நடவடிக்கைக்குப் பதிலடியாகவே தாம் இத்தீர்மானத்தை எடுத்ததாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

2018 ஆம் ஆண்டு காசா மீதான தாக்குதல்களைத் தொடர்ந்து தென்னாப்பிரிக்கா தனது தூதுவரை இஸ்ரேலில் இருந்து மீளப் பெற்றுக்கொண்டது.

அதேபோல் 2023 இல் இஸ்ரேலும் தனது தூதுவரை தென்னாப்பிரிக்காவில் இருந்து திரும்பப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# உக்ரைன் மீதான தாக்குதல்களை ஒரு வாரத்துக்கு நிறுத்தும் ரஷ்யா



உக்ரைன் மீதான தாக்குதல்களை ஒரு வார காலத்திற்கு இடைநிறுத்தி வைக்க ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இணங்கியுள்ளார் என அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அமைச்சரவைக் கூட்டத்தின் போது ட்ரம்ப் இதனைக் கூறியுள்ளார்.

யுக்ரைனில் தற்போது நிலவும் அதிக குளிருடனான வானிலையை கருத்திற்கொண்டு ரஷ்ய ஜனாதிபதி தனது தனிப்பட்ட கோரிக்கையை ஏற்றுக் கொண்டதாக ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இந்த விடயத்தை ரஷ்யா இதுவரை உறுதிப் படுத்தவில்லை என சர்வதச ஊடகங்களின் செய்திகளில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதனிடையே, ரஷ்யா வழங்கிய உறுதிமொழியை கடைப்பிடிக்கும்என தாம் நம்புவதாக க்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள்- 31.01.2026




இன்று நீங்கள் நம்பிக்கை உணர்வு மிகுந்து காணப்படுவீர்கள். உங்களிடம் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்களின் மாறுபாடற்ற மனநிலை காரணமாக நீங்கள் திறமையான முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்ளவும் அதனை குறித்தநேரத்தில் முடிக்கவும் பணியிடச் சூழல் உகந்ததாக இருக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் காணப்படாது. உங்களின் மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று கட்டுப்பாடற்ற சூழ்நிலை காணப்படும். மந்தமான தருணங்கள் காணப்படும். எனவே இருப்பதைக் கொண்டு மகிழ வேண்டும். எதிர்காலத் திற்காக செயல்பட முயல வேண் டும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. முறையாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக செயல்பட இயலும்.

திரைப்படம் பார்த்தல் மற்றும் வெளியிடங்களுக்கு செல்லுதல் போன்ற நிகழ்சிகள் மூலம் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண இழப்பு காணப்படும். பயணத்தின்போது பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

பதட்டம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. யோகா பயிற்சியின் மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். குறைந்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். சிறந்த செயல்திறம் மூலம் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக் கும்.

பணி சம்பந்தமான புதிய வாய்ப்புகள் உருவாகலாம். அந்த வாய்ப்புகளை பயன்படுத்துவதன் மூலம் பணியில் முன்னேற்றம் காணலாம்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங் களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் குடும்ப வளர்ச்சி மற்றும் குடும்பத்தில் நடைபெறும் சுப நிகழ்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள்.பணவரவு மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு உயரும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.




இன்று முன்னேற்றகரமான பலன் களைக் காண்பீர்கள்.இன்று புத்து ணர்ச்சியுடனும் உறுதியுடனும் காணப் படுவீர்கள். புதிய முயற்சிகளில் பங்கு கொள்வது உங்களுக்கு லாபகரமாக அளிக்கும்.

உங்கள் திறமை காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் உங்கள் பணிகளை உற்சாகமாக செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான உறவுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.இன்று போதிய பணம் காணப்படும். இன்று கணிசமான தொகை சேமிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. ஆன்மீக பயணங்கள் உங்களுக்கு நல்ல பலனை அளிக் கும். பயணங்கள் மூலம் பலனுள்ள மாற்றங்கள் ஏற்படும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இதனால் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பது கடினம்.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். உங்கள் உறவின் சிக்கல்களை தீர்க்க உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதன் மூலம் உறவில் நல்லிணக்கம் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேவை யற்ற செலவுகள் கவலையை உண்டாக்கும்.




பொறுமையான அணுகுமுறையை பராமரிப்பதன் மூலம் நீங்கள் சாதக மான பலன்களை காணலாம். சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரலாம். வெற்றி காண முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. பணியின் போது நீங்கள் விழிப்புடன் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படும். சமநிலை அணுகுமுறை மேற்கொண்டு நல்ல புரிந்துணர்வை பராமரியுங்கள்.அதிகரிக்கும் செலவுகள் கவலையை உண்டாக்கும்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். அவற்றின் மூலம் லாபகரமான பலன் கிடைக்கும். நீங்கள் இன்று நம்பிக்கை உணர் வுடன் காணப்படுவீர்கள்.

பணியில் உங்கள் செயல்திறன் அபாரமாக இருக்கும். உங்கள் பணிக்கு மேலதி காரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். இதனால் திருப்தியும் சாதித்த உணர்வும் உங்களிடம் காணப்படும்.

உங்கள் வீட்டில் நடக்கும் சுப நிகழ்ச்சி ஒன்றைப் பற்றி உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவீர்கள். உங்கள் துணையுடன் கொண்டாடி மகிழ்வீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாகக் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.




இன்று காணப்படும் குழப்பமான சூழ்நிலை உங்களுக்கு வருத் தத்தை அளிக்கும். அத்தகைய சூழ்நிலையை கையாள்வது கடி னம். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள் பணிகளை திறம்பட செய்ய முறையாக திட்டமிட வேண்டும்.

உங்களின் உணர்ச்சி வசப்பட்ட மனநிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். எதையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் நன்மை விளையும்.

# இன்றைய ராசி பலன்கள்- 31.01.2026




இன்று நீங்கள் பதட்டமான மனநிலையில் இருப்பீர்கள். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும். விவாதம் செய்வதை தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.உங்கள் பணிகளை சிறப்பாக செய்ய கவனமாக இருப்பது உதவியாக இருக்கும்.

உறவில் ஸ்திரத்தன்மை தக்க வைக்க உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. கூடுதல் செலவுகள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

தூக்கமின்மை காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. பிரார்த்தனை மற்றும் தியானத்தில் ஈடுபடுவதன் மூலம் ஆரோக்கியமாக இருக்கலாம்.




உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். என்றாலும் உறுதி மற்றும் சளைக்காத குணம் மூலம் வெற்றி காண்பீர்கள்.

எதிர்மறை விளைவுகள் மற்றும் எதிர்மறை எண்ணங்கள் சிறப்பாக பணியாற்ற தடையாக இருக்கும். சில கட்டுப்பாடுகள் சிறந்த பலன் காண தடையாக இருக்கும்.

கவனமற்ற பேச்சு காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.உறவில் நல்லிணக்கம் காண நட்பான அணுகுமுறை மேற் கொள்ள வேண்டும்.

வரவும் செலவும் கலந்து காணப்படும். உங்கள் சேமிப்பை உயர்த்துவது கடினமாக உணர்வீர்கள்.

பாதுகாப்பின்மை உணர்வு காரணமாக நரம்பு பிரச்சினை ஏற்படலாம். அமைதியாக இருந்து பிரார்த் தனை மேற்கொள்ளவும்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு சாதகமான நாள். இதன் மூலம் திருப்தி உண்டாகும். வெற்றி காண எளிய அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் பணியில் நீங்கள் திறமையாக செயல்படுவீர்கள். இதனால் திருப்தி கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் நண்பர் இல்ல விழாவில் பங்கு கொள்ள பயணம் மேற்கொள்ளும் போது உங்கள் துணையுடன் அமைதியான தருணங்களை கழிப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கணிசமான தொகை காண அதிர்ஷ்டம் சாதகமாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் நம்பிக்கை காரணமாக நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று பயணம் காணப்படுகின்றது. இது புதியதொடர்புகள் கிடைக்க பயனுள்ள வாய்ப்பை உருவாக்கித் தரும்.

பணியிடத்தில் நன்மையான பலன்கள் கிடைக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு பாராட்டைப் பெறுவீர்கள்.

பயணத்தின்போது உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை கொண்டாடி மகிழ்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். என்றாலும் குடும்பத்திற்காக சிறிது பணம் செலவு செய்ய நேரும்.


ஆரோக்கியமான உணவு உட்கொள்வதன் மூலம் திடமாக இருக்கலாம். அசௌகரியத்தை சமாளிக்கலாம்.

# ஈழ விடுதலைப் போராட்ட முன்னோடி முத்துக்குமாரசாமியை நினைவுகூரும் நிகழ்ச்சி நாளை மாலை திருநெல்வேலியில்!

கடந்த ஜனவரி 19 ஆம் திகதி அமெரிக்காவில் இயற்கை எய்திய ஈழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோ டிகளில் ஒருவரான தம்பித்துரை முத்துக் குமாரசாமி அவர்களை நினைவுகூரும் நிகழ்ச்சி பெப்ரவரி முதலாம் திகதி, ஞாயிற்றுக்கிழமை – அதாவது நாளை – பிற்பகல் 3.00 மணிக்கு, ஆடியபாதம் வீதியில், திருநெல்வேலிச் சந்திக்கு அருகாமையில் உள்ள இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் அமெரிக்கா, வொஷிங்டன் நகரை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அமரர் த. முத்துக்குமாரசாமி அவர்களைத் தவிர்த்து ஈழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகால வரலாற்றை எழுத முடியாது என்னும் அளவுக்கு தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தின் தொடக்க காலத்தில் காத்திரமான பங்களிப்பை நல்கியவர்.

மாணவர் பேரவையின் உருவாக்கத்



தில் பெரும் பங்காற்றிய இவர் தமிழீழ விடுதலை இயக்கம் 1975ஆம் ஆண்டு உருவாகியபோது அதன் தலைவராகவும் இருந்து செயற்பட்டு வந்தவர். பல ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த இவர் பின்னர் அமெரிக்கா சென்று மனித உரிமைக் கண்காணிப்பாளராகவும் உலகம் முழுவதும் உள்ள அகதிகள் முகாம்களின் இயக்குநராகவும் பணி யாற்றி வந்துள்ளார்.

அன்னாரை நினைவுகூருதல் தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலையை அவாவி நிற்கும் அனைவரினதும் கடப்பாடாகும். அந்தவகையில், இந் நினைவுகூர் நிகழ்ச்சியில் முத்துக்கு மாரசாமி அவர்களுடன் சேர்ந்து பய ணித்தவர்கள், தமிழ்த்தேசியப் பற்றா ளர்கள், அவரின் உறவினர்கள், நண் பர்கள் அனைவரையும் தவறாது பங் கேற்று, அவருக்கான நினைவுச் சுடர் ஒன்றை ஏற்றி அஞ்சலி செலுத்துமாறு தயவுடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை இந்து வாலிபர் சங்கத்தின் தலைவரும் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவருமான பொ. ஐங்கரநேசன், இந்து வாலிபர் சங்கத்தின் செயலாளர் யோ. சஜீதரா ஆகியோர் கூட்டாக விடுத்துள்ளனர்.